


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாட்டின் சைக்கிள் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் 5 பேருக்கு தலா ரூ.16,66,646 வீதம், மொத்தம் ரூ.83,33,230 மதிப்பிலான அதி நவீன பந்தய சைக்கிள்களை "TNChampions Foundation "நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்வின் போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! அமைச்சர் க.பொன்முடி எழுதிய

# ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக் கொள்கிறார்! அமைச்சர் துரை முருகன் தலைமை!

சென்னை, அக்.23-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் – வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எழுதிய ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல் வெளியீட்டு விழா 25.10.2024–வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இந்நூலை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நூலை பெற்றுக் கொள்கிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் – வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்புரை யாற்றுகிறார்.

வீ.எம்.எஸ். சுபகுண ராஜனின் ‘கயல் கவின்’ பதிப்பகம் வெளியிடும் இந்நூலை தமிழில் அசதா மொழிபெயர்த்துள்ளார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் – கழக முன்னணியினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### நெல் கொள்முதலை மழைக் காலத்தில் பாதுகாத்திடவும், பண்டிகை காலத்தையொட்டி

# குடும்ப அட்டைதாரர்களுக்கு புகார் வராத வகையில் அனைத்துப் பொருட்களையும் வழங்கிடுக!

## அமைச்சர் அர.சக்கரபாணி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, அக்.23-

வடகிழக்குப் பருவமழையின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து நகர்வு செய்திடவும், எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் அனைத்துப் பொருட்களையும் நியாய விலைக்கடைகளில் இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு புகார் எதுவும் வராவண்ணம் வழங்கிடவும், நெல் கொள்முதலை மழைக் காலத்தில் பாதுகாப்பாக செய்திடவும் உணவுத் துறை அலுவலர்களுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிவுறுத்தினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் தலைமையில் பொது விநியோகம், 2024-25 காரீப் பருவ நெல் கொள்முதல், வடகிழக்குப் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் உணவுத் துறை சார்ந்த அலுவலர்களோடு நேற்று (22.10.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் எதிர்வரும் பண்டிகைக் காலங்களை கவனத்தில் கொண்டு பொது விநியோகத் திட்டப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு, பாமாலின் எண்ணெய் ஆகியவற்றினைச் சிறப்பு கவனம் செலுத்தி நியாய விலைக்கடைகளில் போதுமான அளவு இருப்பு வைத்திடவும், இருப்புக் குறைவாக உள்ள அங்காடிகளில் உடனடியாக நகர்வு செய்து புகார் எதுவும் வராவண்ணம் நல்ல தரத்துடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிடவும் அறிவுறுத்தினார்.

கிடங்குகள் மற்றும் நியாய விலைக்கடைகளில் இருப்பில் உள்ள பொது விநியோகத் திட்டப்பொருட்கள் வடகிழக்குப் பருவமழையால் சேதமடையாமல் காத்திடவும், தாழ்வான பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளைக் கண்டறிந்து



உயரமான பகுதிகளுக்கு மாற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார். 2024-25 காரீப் பருவத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை மழையிலிருந்து பாதுகாத்திட பாலித்தீன் தார்ப்பாய்கள் மற்றும் வெட்டுக் கற்கள் போதுமான அளவு இருப்பு வைத்திடவும், அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் புகார்களைத் தெரிவிக்க துறை அலுவலர்கள், அலுவலர்களின் தொலைபேசி எண்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் மற்றும் புகார்ப் பெட்டிகள் வைத்திடவும், கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் உடனடியாக வரவு வைத்திடவும் அறிவுறுத்தினார்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் பொது விநியோகத் திட்ட ப்பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்கு மேற்கொண்டு வரும் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்திடவும், அரிசிக் கடத்தலை அறவே ஒழித்திடவும் அறிவுறுத்தினார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். ஜெ. ராதாகிருஷ்ணன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி, பொது விநியோக மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்பாக விநியோகித்து பொது விநியோகத் திட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்திடக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், ஆ. அண்ணாதுரை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர், த.மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு இணைச் செயலாளர் அமர் குஷ் வாஹா, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. காயத்திரி கணேசன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்பு லனாய்வுத் துறையின் காவல் துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### அறநிலையத்துறை சார்பில் திருமணம் நடத்தி வைத்ததின் மூலம்

# ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்துள்ளார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, அக். 23 -

முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், இணைகளுக்கு திருமணத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (21.10.2024) அன்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;



முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் பொருளாதாரம் உயரும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையில் சார்பில் திருக்கோயில்களில் ஏழை, எளிய குடும்பங்களை சார்ந்த மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி, சீர்வரிசை பொருட்களை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அந்தவகையில், இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022-2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும் என மொத்தம் 1,100 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் “பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்கள். சென்னை உட்பட மாநிலம் முழுவதும் இன்று மட்டும் மொத்தம் 379 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

மேலும், இணைகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட்கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில், திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 4 இணைகளுக்கும், கொன்னையூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும் என மொத்தம் 7 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒளியேற்றி வைத்துள்ளார்கள்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத் துறை) தி.அனிதா, மாவட்ட அறங்காவலர் குழுக் தலைவர் தவ.பாஞ்சாலன், செயல் அலுவலர்கள் சந்திரசேகரன் (பேரம்பூர்), முத்துராமன் (புதுக்கோட்டை திருக்கோயில்கள்), முத்துகுமார் (திருபுனவாசல்), வட்டாட்சியர் பரணி, ஆய்வாளர்கள் யசோதா (குளத்தூர்), புவனேஸ்வரி (திருமயம்), வானதி (இலுப்பூர்), தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, மாமன்ற உறுப்பினர் (திருவப்பூர்) கனகம்மன்பாபு திருப்பணிக்குழு செல்வராஜ், க.மதியழகன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### திரும்பெரும்புதூரில் 180 கோடி ரூபாய் முதலீட்டில் இருசக்கர வாகன உற்பத்தி

# தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய யமஹா நிறுவனம் முடிவு!

## சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பம்!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி அமைந்தது முதலே தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது. பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்து தொழில் தொடங்கி வருகின்றன. மேலும், ஏற்கனவே உள்ள நிறுவனங்கள், பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்து வருகின்றன. இதனால் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. அந்தவகையில், திரும்பெரும்புதூரில் ஆயிரத்து 789 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்பட்டு வரும் யமஹா நிறுவனம், தனது இருசக்கர வாகன உற்பத்தி தொழிற்சாலையை 180 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்கிறது. வல்லம் வடகாலில் உள்ள தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய சுற்றுச்சூழல் அனுமதிகோரி தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மூலம் ஏற்கனவே 5 ஆயிரத்து 203 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ள நிலையில், தற்போது கூடுதலாக மேலும் 431 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.




தலைமைச் செயலகத்தில் நேற்று (22.10.2024) உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் பொதுவிநியோகம், 2024–25 காரீப்பருவ நெல் கொள் முதல், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு இணைச் செயலாளர் அமர்குஷ்வாஹா, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி காயத்திரி கணேசன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### குஜராத்தில்

# 427 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல்!

## ரூ.250 கோடி மதிப்பிலானது என காவல்துறை தகவல்!

சண்டிகர், அக்.23–

பா.ஜ.க., ஆளும் குஜராத் மாநிலத்தில் போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரித்து காணப்படுகிறது. அதன் சாட்சியாக பல்வேறு இடங்களில் அவ்வப்போது போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், பரூச் மாவட்டத்தில் உள்ள தொழில் வளர்ச்சி கழக வளாகத்தில் செயல்பட்டு வரும் தொழிற்சாலை ஒன்றிலிருந்து 427 கிலோ அளவுக்கு போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு 250 கோடி ரூபாயாகும். இதுதொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குஜராத்திலேயே பரூச் மாவட்டத்தில்தான் அதிகளவிலான போதைப்பொருட்கள் புழக்கத்தில் உள்ளன. இம்மாவட்டத்தில் இருந்து கடந்த 10 நாட்களுக்குள் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், போதைப் பொருட்கள் பறிமுதல் விவகாரம் குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள குஜராத் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (22.10.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் துறையின் புதிய அறிவிப்புகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், அரசு துணைச் செயலாளர் பவன்குமார் ஜி கிரியப்பனவர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் B. கிருஷ்ணமூர்த்தி, IOFS, துணை இயக்குநர் கி.ரமேஷ், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திருமதி. ராஜஸ்ரீ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.